இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04-07-2023

# ஆளுநரின் அதிகார அத்துமீறல்கள்! 2

ஆளுநரின் தன்னிச்சையான செயல்பாடுகளுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றாக நிலைப்பாடு எடுத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் என்ன விமர்சனங்களை வைக்கிறார்களோ, அதே விமர்சனம்தான் அனைத்து தரப்பிடம் இருந்தும் வருகிறது.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், இக்கடிதங்கள் அலட்சியப்படுத்த வேண்டியவை என்றாலும், இந்தச் சம்பவங்களின் பின்னணியில் உள்ள விவரங்கள் மற்றும் சட்டம் குறித்து தனது நிலையை விளக்க விரும்புவதாகவும் என்றுதான் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இந்த இரண்டு கடிதங்களுக்கும் முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் உதவியும் ஆலோசனையும் கோரப்படவில்லை அல்லது வழங்கப்படவில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் பதிவு செய்திருந்தார்கள். அரசியலமைப்பு எந்திரத்தின் சீர்குலைவு, மறைமுகமான அச்சுறுத்தல் போன்ற கடுமையான வார்த்தைகளைக் கொண்ட முதல் கடிதத்தை அனுப்பிய சில மணி நேரத்திலேயே, அட்டார்னி ஜெனரலின் கருத்தைக் கேட்பதற்காக அதனை திரும்பப் பெறுவதாகக் கூறி இருப்பதன்மூலம், இது போன்ற முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன், சட்ட ஆலோசனையைக் கூட ஆளுநர் கேட்கவில்லை என்பதும், உள்துறை அமைச்சரின் கருத்தைக் கேட்பதற்காக இந்த முடிவை நிறுத்தி வைத்ததும், அரசியலமைப்புச் சட்ட விவகாரத்தில் ஆளுநர் அவசரகதியில் செயல்பட்டுள்ளதை வெளிப்படுத்துவதாக உள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்கு உள்ளாகும் நபருக்கும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நபருக்கும், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நபருக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கி, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நபர் மட்டுமே தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும், இதனை உச்சநீதிமன்றத் தீர்ப்பில் உறுதி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர், உச்சநீதிமன்றத் தீர்ப்பில் உள்ள இதற்கான பிரிவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின்படி, தண்டிக்கப்படும் நபர் மட்டுமே எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது தெளிவாகிறது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பின்படி கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் அமைச்சராக நீடிப்பதில் எந்த தடையும் இல்லை என்றும், அரசியல் அமைப்பின் 75-வது பிரிவு இதனை தெளிவுபடுத்தி உள்ளதாகவும், குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை அமைச்சரவையில் சேர்ப்பது பிரதமரின் உரிமை என இந்த சட்டப்பிரிவில் குறிப்பிட்டு உள்ளதையும், பிரதமருக்கு உள்ள உரிமைகள், முதலமைச்சருக்கும் பொருந்தும் என அரசியல் சட்டப்பிரிவு 164-ல் குறிப்பிடப்பட்டு உள்ளதையும் முதலமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.**

இந்த சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் பிரதமர் மற்றும் முதலமைச்சர்களின் உரிமைகள் குறித்து உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தெளிவாக்கி உள்ளதாகவும், ஒரு குறிப்பிட்ட விசாரணை அமைப்பு அமைச்சர் ஒருவர் மீது வழக்குப்பதிவு செய்வதால் மட்டுமே அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். விசாரணையின்போது, நீதிமன்றம் தெரிவிக்கும் கருத்துகளை இறுதி தீர்ப்பாக கருத வேண்டியது இல்லை என்றும், சட்டமன்றத்திற்கு மட்டுமே அமைச்சர்கள் பதில் அளிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இந்த விளக்கங்களின்படி அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

**இதைத்தான் உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் அஜித் சின்ஹா சொல்லி இருக்கிறார். ‘அமைச்சர்கள் பதவி நீக்க விவகாரத்தில் முதலமைச்சரின் பரிந்துரை இல்லாமல் ஆளுநரால் ஒருதலைபட்சமாகச் செயல்பட முடியாது’ என்று அஜித் சின்ஹா சொல்லி இருக்கிறார்.**

**இது தனிப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி தொடர்புடையது மட்டுமல்ல, முதலமைச்சரின் அதிகாரம் தொடர்புடையது ஆகும். ‘ஒருதலைப்பட்சமாக ஒரு அமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது. அமைச்சரவையில் யார் இருக்க வேண்டும், யார் இருக்கக் கூடாது என்பதை முடிவு செய்வது முதலமைச்சரே’ என்று முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி சொல்லி இருக்கிறார். இது தான் முதலமைச்சர் அவர்கள் சொல்வதும்!**

தி இந்து, தி இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, தி இந்துஸ்தான் டைம்ஸ், தி டிரிபியூன் உள்ளிட்ட ஆங்கில நாளிதழ்கள் அனைத்தும் ஆளுநரின் செயல்பாட்டைக் கண்டித்து விட்டன. மற்ற மாநிலங்களில் இருந்து வெளியாகும் நாளிதழ்களும் கண்டித்து விட்டன. இவை அனைத்துமே, ஆளுநர் ஆர்.என்.ரவி அத்துமீறிச் செயல்படுகிறார் என்பதையே சொல்கின்றன. அரசியல் ரீதியாகவோ, கருத்து முரண்பாடுகளின் அடிப்படையிலோ ஒருவர் விமர்சிக்கப்படுவது வேறு. அது இயற்கையானதுதான். ஆனால், சட்டத்தை மீறிச் செயல்படுவதையே அவர் வாடிக்கையாக வைத்திருக்கிறார்.

*** மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் சட்ட முன்வடிவுகளுக்கு அனுமதி தர மறுக்கிறார். நிறுத்தி வைக்கிறார். ‘நிறுத்தி வைத்தாலே நிராகரித்ததாக அர்த்தம்’ என்கிறார்.**

*** மாநில அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்படும் உரையை வாசிக்க மறுக்கிறார். அதை திருத்துகிறார். தனக்கு விருப்பமானதை வாசிக்கிறார்.**

*** மாநில அமைச்சரை திடீரென நீக்குகிறார் - இவை அனைத்தும் அதிகார அத்துமீறல்கள் ஆகும்.**

‘அரசியலமைப்புச் சட்டம் வழங்காத அதிகாரத்தையோ - அரசியலமைப்புச் சட்டத்தையோ ஆளுநர் பயன்படுத்த முடியாது’ என்று மகாராஷ்டிரா மாநில விவகாரம் குறித்த தீர்ப்பில் சில மாதங்களுக்கு முன்பு உச்சநீதிமன்றம் சொன்னது. இதையெல்லாம் உணர்ந்து செயல்படுபவராக ஆர்.என்.ரவி இல்லை.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு பா.ஜ.க. அனுப்பி வைக்கும் ஆளுநர்களின் வேலை இதுவாக இருக்குமானால், கெடுதல் பா.ஜ.க.வுக்குத்தான். ஆர்.என்.ரவிக்களுக்கு இதனால் எந்த இழப்பும் இல்லை. முன்னாள் ஆளுநர்கள் என்ற கோதாக்களில் டீ பார்ட்டிகளில் முதல் வரிசை நாற்காலி எங்கும் கிடைக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் ஒரு நாடாளுமன்ற நாற்காலி கூடக் கிடைக்காது என்பதை உரியவர்கள் உணர வேண்டும்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (3.7.2023), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டியில்

# தங்கக் கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் - பயிற்சியாளர்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து வாழ்த்து!

**சென்னை, ஜூலை 4 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.7.2023) தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 27வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டியில் தங்கக் கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் சந்தித்து, கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.**

27வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டி, பஞ்சாப் மாநிலம், அம்ரிஸ்தரில் ஜூன் 12 முதல் 28 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் விளையாடிய தமிழ்நாடு அணி அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பின்னர் 26.6.2023 அன்று நடைபெற்ற இரயில்வே அணிக்கு எதிரான அரையிறுதியில், தமிழ்நாடு அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு சீனியர் பெண்கள் கால்பந்து அணி இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, 28.6.2023 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹரியானா அணியை வென்று, முதலிடம் பெற்று தங்கக் கோப்பையை வென்று சாதனை படைத்தது.

தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு அணியின் சார்பில் டி.தேவி, என்.சௌமியா, பி.தனலட்சுமி, எஸ்.கௌசல்யா, என்.லாவண்யா, எம்.பவித்ரா, பி.துர்கா, எஸ்.சண்முகப்பிரியா, எம்.சுபாஷினி, எம்.பரமேஸ்வரி, எஸ்.பிரியதர்ஷினி, எம்.மாளவிகா, எம்.நந்தினி, ஏ.கார்த்திகா, கே.இந்துமதி, ஆர்.வினோதினி, எஸ்.ஐஸ்வர்யா, ஆர்.சந்தியா, பி.சந்தியா, ஆர்.யுவராணி, என்.அம்சவள்ளி மற்றும் பயிற்சியாளர்கள் திருமதி. எஸ்.கோகிலா மற்றும் திருமதி வி.கலா ஆகியோர் பங்கேற்றனர். இந்த அணியில் உள்ள 12 வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற முன்னாள் மாணவியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

27வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டியில் முதலிடம் பெற்று தங்க கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேற்றைய தினம் சந்தித்து வாழ்த்துப் பெற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் - திசையன்விளையில்

# அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்!

நெல்லை, ஜூலை 4- கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நிர்வாகத் திறமையை கருத்தில் கொண்டும், 2 ஆண்டு சாதனை திட்டங்களின் பயனை தெரிந்து கொண்டு நெல்லை மாவட்டம் திசையன்விளை பேரூராட்சி அ.தி.மு.க. 7வது வார்டு உறுப்பினர் ஆறுமுக தேவி நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைத்து கொண்டார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. கடந்த உள்ளாட்சி தேர்தலில் அ.தி.மு.க. 9 இடங்களை பெற்றது.

இந்நிலையில் தி.மு.க. கூட்டணியில் 9 பேர்கள் இருந்து வருகின்றனர்.

தற்போது அ.தி.மு.க. 7வது வார்டு உறுப்பினர் ஆறுமுக தேவி அவரது கணவர் 6வது வார்டு அ.தி.மு.க. செயலாளர் லிங்கராஜ் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர், மாவட்ட மகளிர் அணி தலைவர் கமலா நேரு, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி முருகன், வழக்கறிஞர் அணி செல்வ சூடாமணி, லயன் சுயம்புராஜ், பேரூராட்சி உறுப்பினர்கள் நடேசன் அரவிந்த், அலெக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத்தில் இணைந்த ஆறுமுகதேவி, லிங்கராஜ் ஆகியோருக்கு கழக உறுப்பினர் படிவத்தை மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வழங்கினார்.

தற்போது திசையன்விளை பேரூராட்சியில் தி.மு.க. கூட்டணி 10 ஆக உயர்ந்துள்ளது. அ.தி.மு.க. 8 ஆக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### முரசொலி துணை ஆசிரியர்

# எஸ்.சுந்தரமூர்த்தி இல்ல மணவிழா!

## பெங்களூருவில் 9ஆம் தேதி நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 4- முரசொலி துணை ஆசிரியர் எஸ்.சுந்தரமூர்த்தி இல்ல மணவிழா வருகிற 9ஆம் தேதி பெங்களூருவில் நடைபெறுகிறது. முதல் நாள் 8ஆம் தேதி மாலை வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை முரசொலி துணை ஆசிரியர் எஸ்.சுந்தரமூர்த்தியின் இளைய சகோதரர் ஆர்க்காடு எஸ்.மணிவாசகன் - நினைவில் வாழும் கலைமணி (எ) பார்வதவர்த்தினி ஆகியோரின் புதல்வர் எம்.சந்தோஷ் பெங்களூரு ஸ்ரீராம் புராவில் நினைவில் வாழும் கோ.ஜெயராமன் - புவனேஸ்வரி ஆகியோரின் மகள் மோனிகாவுக்கும் 9.7.2023 அன்று காலை 7.30 மணியளவில் பெங்களூரு ஸ்ரீராம் புரா சாய்பாபா நகர் ஸ்ரீ சாய்பாபா திருமண மண்டபத்தில் மணவிழா நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு மற்றும் மணவிழாவில் உறவினர்களும், நண்பர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை தொழிலாளர்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரா.ஸ்ரீதரன் தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலுவை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா ப.விஜயரங்கன், மாவட்டப் பிரதிநிதி குட்டி க.புகழேந்தி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பச்சையம்மன் முத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கு.கணேஷ், தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் கந்தன் உள்ளிட்டோர் உள்ளனர்.